களின் பணி திட்ட அறிக்கையின்படி முடிக்கப்பெறாமலும் ஒரு குழாய் கிணறு பொய்த்துவிட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. நிலுவையில் உள்ள வேலைகளை முடிக்கத் தேவையான கூடுதல் நிதி உதவி பெறும் பொருட்டு திருந்திய மதிப்பீடு தயாரித்து ஒப்புதல் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே வேடசந்தூர் தொகுதி தொப்பநாயக்கனூர் இறவை கூட்டுறவுச் சங்கம் மூலம் தோண்டப்பட்ட கிணறுகள் முழுவதும் செயல்படாது இருக்கின்றன என்று கூறுவது சரியல்ல.

வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலேயே, தோண்டப்பட்ட 6 இறவை கிணறுகளில் 2 கிணறுகளுக்கு இன்னும் மின்சார இணைப்பு கொடுக்காத காரணத்தால் செயல்படாமல் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதுவும் இந்தப் பணி 1973 ஆம் ஆண்டிலே முடிக்கப்பட்ட பணி, அது மின்சார கருவி பொருத்தப்படாத காரணத்தால் இயங்காமல் இருக்கிறது. அதைப்போலவே, விவர அறிக்கையிலேயே, தமிழ் நாடு மாநில நிலவள வங்கி ரூ. 4,95,400 கடன் தர அனுமதித்திருந்தாலும், வேடசந்தூர் நிலவள வங்கி மூலம் 3,72,820 மட்டுமே வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த 1 லட்சம் ரூபாய் கடனாக வழங்கப்படாததினால்தான், 7 ஆண்டு காலமாக அந்த கிணறுகள் செயல்படாமல் இருக்கின்றன என்பதை கருத்தில் கொண்டு, குறிப்பிட்ட கால அளவுக்குள் தொடங்கவும், புதிதாக போடாமல் இருக்கிற கிணறுகளுக்கு அந்த சங்கத்திலிருந்து கடன்கள் வழங்கவும், இந்த 1 கோடியே 22 ஆயிரம் ரூபாய்க்கு வட்டி சலுகை அளிப்பதற்கு அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மின் இணைப்புக் கொடுப்பது போன்ற சில பிரச்சினைகளில் சில ஆண்டுகளாகவே அங்கே தாமதம் ஏற்பட்டிருப்பது உண்மைதான். விவசாயிகளுக்கும் அந்தப் பிரச்சனை இருக்கிறது என்பதும் உண்மைதான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டது போல் விவசாயிகளின் நலன் கருதி அதையெல்லாம் உடனடியாக நடைமுறைப்படுத்த அரசாங்கம் உத்தரவிட்டு விரைவில் இதை நடைமுறைப்படுத்தும்.

அரசினர் தீர்மானம்—தொடர்ச்சி.

ஆ. விதி 32-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ தளர்த்தி இப் பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.